*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*09 10 2025 THURSDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

- *பிரதமர் திரு. நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer-ருடன் மும்பையில் இன்று பேச்சுவார்த்தை நடத்தினார்.*

- *பாதுகாப்பு துறையில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.*

- *ஜனநாயக நெறிமுறைகள் மற்றும் மனித உரிமைகளை பேணிக்காப்பதில் இந்தியா முன்னோடியாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.*

- *பீகார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்துமாறு அரசியல் கட்சிகளுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.*

- *அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்த அமைதி திட்டத்தின்படி, பிணைக் கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் – ஹமாஸ் அமைப்பினரிடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*திரு. Keir Starmer இங்கிலாந்து பிரதமராக பொறுப்பேற்ற பிறகு, இருதரப்பு ஒத்துழைப்பு மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*மும்பையில் இன்று திரு. Keir Starmer-ம், பிரதமரும் இருநாட்டு குழுக்கள் அளவிலான பேச்சுவார்த்தை நடத்தினர்.*

*அதனைத்தொடர்ந்து கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, திரு. Keir Starmer-ரின் இந்தியப் பயணத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்பதாக கூறினார்.*

*கடந்த ஜூலை மாதம் தாம் இங்கிலாந்து சென்றபோது, இருநாடுகளிடையே விரிவான பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள ஒப்புக் கொண்டதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.*

*>>>>>><<<<<<*

*பாதுகாப்பு துறையில் இந்தியா - ஆஸ்ரேலியா இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.*

*ஆஸ்திரேலியாவின் கான்பரா சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், அந்நாட்டு துணைப் பிரதமரும், பாதுகாப்புத் துறை அமைச்சருமான திரு. Richard Marles-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.*

*இருதரப்பு ஒத்துழைப்பு, இணைய பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, பல்வேறு உலகளாவிய சவால்கள் குறித்து இருவரும் விவாதித்தனர்.*

*இந்த பேச்சுவார்த்தையின் முடிவில், இந்தியா – ஆஸ்திரேலியா இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.*

*அதனைத் தொடர்ந்து, திரு. ராஜ்நாத் சிங், ஆஸ்திரேலிய பிரதமர் திரு. Anthony Albanese-ஐயும் சந்தித்து பேசினார்.*

*இதுகுறித்து திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்ந்து வளர்ச்சியும், வலிமையும் அடையும் என்று தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<

*ஜனநாயக நெறிமுறைகள் மற்றும் மனித உரிமைகளை பேணிக்காப்பதில் இந்தியா முன்னோடியாக திகழ்வதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.*

*பார்படாஸ் நாட்டின் Bridgetown நகரில் நடைபெறும் காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில், தொழில்நுட்பம் குறித்த பயிலரங்கிற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான காமன்வெல்த் நிதியம் மற்றும் காமன்வெல்த் இளையோர் திட்டங்களில் இந்தியாவின் பங்களிப்பை சுட்டிக்காட்டினார்.*

*காமன்வெல்த் நாடுகளின் மொத்த மக்கள்தொகையில் 60 சதவீத மக்கள் இந்தியாவில் வசிப்பதாக குறிப்பிட்ட அவர், பருவநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளிலும் இந்தியா முன்னணியில் இருப்பதாக தெரிவித்தார்.*

கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில், இந்தியாவில் பசுமை ஹைட்ரஜன் இயக்கம் செயல்படுத்தப்படுவதுடன், சூரியசக்தி மின்உற்பத்தி பூங்காக்களும் அதிக அளவில் அமைக்கப்பட்டு வருவதாக திரு. ஓம் பிர்லா கூறினார்.

>>>>>><<<<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்த வேண்டும் என்று அரசியல் கட்சிகளுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தி, *Deep Fake* போன்றவற்றை உருவாக்கி எதிரணியைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு எதிராக சமூக ஊடகங்களில் தவறான தகவல்களை பரப்பினாலோ, அல்லது விளம்பரங்களை வெளியிட்டாலோ உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான விளம்பரங்களை வெளியிடும்போது, அதுகுறித்த தெளிவான தகவல்களை தெரிவிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில், இந்தியா முக்கியப் பங்காற்றி வருவதாக, சர்வதேச செலாவணி நிதியத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. *Kristalina Georgieva* பாராட்டு தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் சர்வதேச செலாவணி நிதியத்தின் வருடாந்திர கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இதனை தெரிவித்துள்ளார்.

உலக அளவில் வளர்ச்சிக்கான நடைமுறைகள் மாறி வருவதாகவும், முக்கியமான வளர்ச்சி இயந்திரமாக இந்தியா உருவெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

*டிஜிட்டல் பணப்பரிமாற்றம், பொது கட்டமைப்பு வசதி போன்றவற்றின் வாயிலாக இந்தியாவின் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் திருமதி. Kristalina Georgieva கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினரியே இரண்டாண்டுகளாக நடைபெற்று வரும் மோதலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்த அமைதி திட்டத்தின்படி, முதற்கட்டமாக பிணைக் கைதிகளை விடுவிக்க இருதரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.*

*ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில், ஆயிரத்து 250 இஸ்ரேலியர்கள் உயிரிழந்ததுடன், 250 பேர் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.*

*இதேபோன்று, இஸ்ரேல் நடத்திய பதிலடி தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் உட்பட காஸா பகுதியைச் சேர்ந்த 67 ஆயிரம் பேர் உயிரிழந்த நிலையில், தற்போது இருதரப்பினரிடையே உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.*

*இதனை சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்க அதிபர், இந்த அமைதி திட்டத்தின் முதல்கட்டத்தை செயல்படுத்த இஸ்ரேலும், ஹமாஸ் அமைப்பினரும் ஒப்புக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்மூலம், பிணைக் கைதிகள் அனைவரும் விரைவில் விடுதலை செய்யப்படுவதுடன், இஸ்ரேல் தனது படைகளை காஸாவிலிருந்து விலக்கிக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த அமைதி உடன்படிக்கையை பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரவேற்றுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில். பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவதுடன், காஸா பகுதி மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்கச் செய்வதோடு, காஸாவில் அமைதியை நிலைநாட்ட வழிவகுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*இந்த நடவடிக்கை, இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூவின் வலிமையான தலைமைத்துவத்தை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.*

*ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆன்டனியோ குட்ரஸ் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும், இந்த அமைதி உடன்படிக்கையை வரவேற்றுள்ளனர்.*

>>>>>><<<<<<

*ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி, புதுதில்லியில் இன்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்து பேசினார்.*

*குடியரசு துணைத்தலைவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*முன்னதாக. தில்லி பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் பொறுப்பு வகிக்கும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை, அந்த பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் Yogesh Singh சந்தித்து, அப்பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கிக் கூறினார்.*

>>>>>><<<<<<

*மத்தியப்பிரதேசத்தில் இருமல் மருந்து அருந்திய குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, Coldriff மருந்தை தயாரித்த Sresan Pharmaceuticals நிறுவனத்தின் உரிமையாளர் ரெங்கநாதன், சென்னையில் மத்தியப்பிரதேச காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

*இதனிடையே, சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், Coldriff மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் உரிமத்தை நிரந்தரமாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – மா. சு 44 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

*கேரள அரசு பேருந்துகளில் புற்றுநோயாளிகள் இலவசமாக பயணம் செய்யலாம் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.*

*கேரள சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கணேஷ்குமார், இந்த உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாக கூறினார்.*

இதன்படி, சூப்பர் ஃபாஸ்ட் பேருந்துகள் உட்பட கேரள அரசு போக்கவரத்துக் கழகத்தின் அனைத்து பேருந்துகளிலும் புற்றுநோயாளிகள் கட்டணமின்றி பயணம் செய்யலாம் என்றும் திரு. கணேஷ்குமார் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

**விளையாட்டுச் செய்திகள்**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இன்று நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – அமெரிக்காவின் *Reese Stalder* இணை, ஜெர்மனியின் *Hendrik Jebens* – இங்கிலாந்தின் *Joshua Paris* இணையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

உலக கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<